பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

11 05 2024 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் வரும் திங்கட்கிழமை நான்காவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 96 தொகுதிகளில் இன்று மாலை பிரச்சாரம் முடிவடைந்தது.
2. மூன்றாவது கட்ட வாக்குப்பதிவில் 67 புள்ளி ஆறு எட்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
3. இந்தியா – ஐரோப்பிய யூனியன் தாராள வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
4. தெற்காசிய நாடுகள் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு **Mohammed Golam Sarwar** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.
5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை - கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

-----

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<>>>>>**

மக்களவைக்கு நான்காவது கட்டமாக நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெற உள்ள 96 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்தத் தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் 25, தெலங்கானாவில் 17, உத்தரப்பிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மேற்குவங்கம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் தலா 8, பீஹாரில் 5, ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதி என மொத்தம் 96 தொகுதிகளில் வரும் திங்கட்கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

ஆந்திரப்பிரதேசத்தில் 175 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், ஒடிசாவில் மொத்தம் உள்ள 147 சட்டப்பேரவை தொகுதிகளில் 28 தொகுதிகளுக்கும் அன்றைய தினம் தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கிடையே, மக்களவைக்கு 5வது மற்றும் 6வது கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

மாநில மற்றும் தேசிய கட்சிகளின் தலைவர்கள் தொகுதிகளில் முகாமிட்டு தங்களது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

**<<<<<>>>>>**

லடாக்கின் **'Padum Zanskar'** பகுதியில் வாக்காளர் விழிப்புணர்வுக்கான இயக்கத்தின் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், வாக்களிப்பது என்ற ஜனநாயக நடைமுறையில் அவர்கள் ஆர்வமுடன் பங்கேற்க செய்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் இம்மாதம் 20-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில், அனைத்துத்தரப்பு மக்களும் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இளைஞர்கள், குறிப்பாக முதல் முறை வாக்காளர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என பதாகைகள் மற்றும் பிரச்சார வாகனங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

அரசு அதிகாரிகள், வாக்குச்சாவடி நிலையிலான அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து மக்களிடையே வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

<<<<<>>>>>

இதனிடையே, மக்களவைக்கு மூன்றாவது கட்டமாக இம்மாதம் 7-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், 65 புள்ளி ஆறு எட்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்று வெளியிடப்பட்டுள்ள தலைமை தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில், ஆண்கள் 66 புள்ளி எட்டு ஒன்பது சதவீதத்தினரும், பெண்கள் 64 புள்ளி நான்கு ஒன்று சதவீதத்தினரும், மூன்றாம் பாலினத்தவர் 25 புள்ளி இரண்டு சதவீதம் பேரும் வாக்களித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா – ஐரோப்பிய யூனியன் தாராள வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஐரோப்பிய தேசிய தின கொண்டாட்டத்தையொட்டி, இந்தியாவில் உள்ள ஐரோப்பிய யூனியனின் தூதர் திரு ஹெர்வே டெல்ஃபின் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரு ஜெய்சங்கர், வர்த்தக தொழில்நுட்ப குழுமத்துடன் இணைந்து வர்த்தக ஒப்பந்தத்தின் செயல்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை இந்த ஒப்பந்தம் மேலும் ஊக்குவிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா பொருளாதார மண்டல அமைப்பின் முக்கியத்துவத்தை இந்தியா நன்கு உணர்ந்துள்ளதாகவும், கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு வளர்ச்சிப்பாதையில் செல்லும் என ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் நீண்டகால நட்பு நாடாக ஐரோப்பிய யூனியன் திகழ்கிறது என்று கூறிய அவர், மேலும் பல ஆண்டுகளுக்கு இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு நீடிக்கும் என்றும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஐரோப்பிய யூனியன் தூதர் திரு ஹெர்வே டெல்ஃபின், இந்தியா தங்கள் நாட்டிற்கு அளித்துவரும் முக்கியத்துவம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும் பல ஆண்டுகாலம் இந்த நட்புணர்வு வலுப்பெற்றிருக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் என்ற கருத்தை பிஜேபி பரப்பி வருவதாக ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்களது கட்சியை ஒடுக்க பிஜேபி முயல்வதாகவும் குற்றம் சாட்டினார்.

ஆம் ஆத்மி என்பது கட்சி மட்டுமல்ல, ஒரு கொள்கையின் வடிவம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர்களை சிறைக்கு அனுப்பும் நடவடிக்கையை அக்கட்சி மேற்கொண்டுள்ளதாகவும் திரு அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டினார்.

**<<<<<>>>>>**

தெற்காசிய நாடுகள் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு முகமது **‘Golam Sarwar** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

இதனை சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு **‘Randhir Jaiswal**, சார்க் பொதுச்செயலாளரின் இந்திய வருகை, தெற்காசிய நாடுகள் உடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமையும் என்று கூறியுள்ளார்.

இப்பயணத்தின்போது திரு சர்வார், பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டு, உரையாற்ற உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை இணையமைச்சர் டாக்டர் ராஜ்குமார் ரன்ஜன் சிங், வெளியுறவுத்துறை செயலர் திரு வினய் மோகன் **Kwatra** உள்ளிட்டோரை அவர் சந்திக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் எதிர்காலம் என்ற தலைப்பில், சக்தி சின்ஹா என்ற நினைவு சொற்பொழிவையும் சார்க் பொதுச்செயலாளர் திரு சர்வார் ஆற்றவுள்ளதாகவும் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

**<<<<<>>>>>**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம் தெரிவித்துள்ளது.

மாணவர்கள் **www.skilltraining.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் மாநிலம் முழுவதும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட திறன்பயிற்சி அலுவலகங்கள் ஆகியவற்றில் 136 சேர்க்கை உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

8ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்தவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு மாணவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை இணையதளம் வாயிலாக வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>**

நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப்பகுதியிலும், தென்பகுதியிலும் வரும் திங்கட்கிழமை வரை இடி மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம் மற்றும் சிக்கிமில் நாளை வரை மணிக்கு 40 முதல், 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மற்றும் ஜார்கண்டில் காற்றுடன் கூடிய கனமழை நாளை வரை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்திலும், ஒடிஷாவிலும் ஆங்காங்கே கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசத்திலும், மத்திய மகாராஷ்ட்ராவிலும் நாளை வரை பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இம்மையத்தின் இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் இன்று எமது செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்புள்ளதாகவும் கூறினார்.

*(வாய்ஸ் பைட் - செந்தாமரை கண்ணன் - 50 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

பிரேசில் நாட்டில் ரியோகிராண்டே மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 120-ஆக உயர்ந்துள்ளது.

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 756 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 141 பேரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராணுவத்தினர் மீட்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெருமழை வெள்ளத்தில் மின் கட்டமைப்புகள் மற்றும் குடிநீர் வழங்கும் கட்டமைப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், மின் விநியோகமும், குடிநீர் தட்டுப்பாடும் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ளது.

85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

71 ஆயிரம் பேர் பள்ளிகள் மற்றும் விளையாட்டு அரங்குகள் மற்றும் தேவாலயங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாளை வரை மழை தொடரும் என்று அந்நாட்டின் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இரவு ஏழரை மணிக்கு தொடங்குவதாக இருந்த இப்போட்டி மழை காரணமாக தடைபட்டுள்ளது.

---------------

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே – நியூசிலாந்தின் **Mary Hourigon** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 3-6, 6-3, 10-6 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **'Hurana Arakawa – Aoi Ito** இணையை வென்றது.

---------------

உலக மல்யுத்த ஒலிம்பிக் தகுதிச் சுற்று போட்டியில், இந்தியாவின் **Nisha Daahiya** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இஸ்தான்புல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 68 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் அவர், ருமேனியாவின் **Alexandra Anghel**-ஐ வென்றார்.

இதன்மூலம் அவர் பாரிஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இந்திய மல்யுத்த வீராங்கனைகள் நான்கு பேர் ஒலிம்பிக் போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்றுள்ள நிலையில் நிஷா தஹியாவும் அதில் இடம் பெற்றுள்ளார்.

**<<<<<END>>>>>**